அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VI.] **DECEMBER**, 1906-௵ டிசெம்பர். [இலக்கம் 4.

ஒரு யானைக்குட்டி.

ஒருநாள் மாலைப்பொழுதில் பிள்ளைகள் பாடசாலையிலே படித்துக்கொண்டிருக்கையில் வாத்திய முழக்கமொன்று கேட்டது. அந்த ஒலி காதில் வீழ்ந்தவுடனே பிள்ளைகளெல்லாம் கையிலிருந்த புஸ்தகங்களைக் கீழேபோட்டுவிட்டு அதிக ஆவலோடு எழுந்து பார்த்தார்கள். தாரையும் தப்பட்டையுமாக வருகிற அந்த முழக்கம் வரவரப் பள்ளிக்கூடத்திற்குக் கிட்டக் கிட்டக் கேட்கலாயிற்று. அந்த வாத்திய முழக்கத்துடனே அநேகம் மனிதர்கள் கூடி வருகிற இரைச்சலும் காலோசையும் கேட்கலாயின. அதைக் கேட்கக் கேட்க, பிள்ளைகளுக்கு அந்த விநோதத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசை மிகவும் அதிகமாயிற்று. அப்பொழுது ஒரு சிறுபையன் மற்றொருவனைப் பார்த்து 'ஏதோ வேடிக்கைவருகிறது' என்று ஏகாந்தமாகக் காதோடு சொன்னான். ஆனாலும் அவன் சொன்னது அந்த வகுப்புப் பிள்ளைகளெல்லாருக்கும் கேட்டது.

அப்பொழுதும் வகுப்பில் பாடம்மாத்திரம் விடாமல் நடந்துகொண்டேயிருந்தது. பாடம் நடக்கையி[illegible]ம், பிள்ளைகள் பாடத்தின்மேல் அத்தனையாகக் கருத்தில்லாமல், வேடிக்கையைப் பார்ப்பதிலேயே கருத்துள்ளவர்களாய் எப்பொழுது பாடம் முடியப்போகிறதென் றிருந்தார்கள். பள்ளிக்கூடம் விட்டவுடனே பிள்ளைகளெல்லாரும் அதற்கெதிரேயுள்ள மைதானத்திற்கு ஓடினார்கள். அங்கேதான் வேடிக்கை காட்டப் போகிறார்களென்று பிள்ளைகளுக்கு நன்றாய்த் தெரியும்.

அந்த வாத்தியகோஷத்தோடு வந்தவை என்னவென்று நினைக்கிறீர்கள்? புலிகளும், சிங்கங்களும், அழகான பல குதிரைகளும் கொண்டுவரப்பட்டன. அவைகளைப் பார்த்தபொழுது நம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குண்டான சந்தோஷத்தை நாம் என்னென்று சொல்லுவோம்! எல்லாப் பிள்ளைகளும் அங்கே பெருங்கூட்டமாகக் கூடிப்போனார்கள். அவர்களைப் பார்த்து ஆட்டக்காரன் சந்தோஷம் உண்டாகும்படி, 'பிள்ளைகளே! நான் இப்பொழுது ஒரு குழந்தையைக் கொண்டுவந்து உங்களுக்கு வேடிக்கை காட்டட்டுமா?' என்று கேட்டான். குழந்தையென்று சொன்னதைக் கேட்டு அந்தப் பிள்ளைகள் இதென்ன ஆச்சரியமென்று ஒன்றும் பதில்சொல்லத் தோன்றாமல் தலைகுனிந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். அதைக்கண்டு ஆட்டக்காரன் அங்கிருந்த கூடாரத்துக்குள்ளே போய் ஒரு யானைக்குட்டியின் கழுத்திலே கையைப்போட்டுக் கொண்டுவந்தான். அந்தப் பிள்ளைகள் அப்படிப்பட்ட யானைக்குட்டியை அதற்குமுன் ஒருபோதும் பார்த்ததேயில்லை. அது பார்வைக்குத் தன் தாயைப்போலவே யிருந்தாலும், சிறு குழந்தைகள் போல் விளையாட்டுத் தன்மையுள்ளதாய், பல சில் விஷங்கள் செய்துகொண்டிருந்தது. அது தன்னுடைய துதிக்கையைத் தூக்கி எஜமானன் பைக்குள்ளே நுழைத்து அதிலிருந்து ஒரு அப்பத்தை யெடுத்துத் தன் வாயிலே போட்டுக்கொண்டது. அதைக்கண்ட பிள்ளைகளெல்லாரும் கைகொட்டி நகைத்தார்கள். பிறகு யானைக்காரன் அந்த யானைக்குட்டியைப் பார்த்து, 'நீ இந்தப் பிள்ளைகளைக்

கையெடுத்துக் கும்பிடு' என்று சொல்ல, அது அப்படியே தன் துதிக்கையைத் தூக்கிப் பிள்ளைகளை வந்தனம் செய்தது. அப்புறம் அவன் அந்தப் பிள்ளைகளெல்லாரும் கேட்டுச் சந்தோஷப்படும்படி அந்த யானைக்குட்டியைப் பற்றின விநோதமான கதைகள் அநேகம் சொன்னான். அவைகளில் ஒன்ருவது,—

"சிறுவர்களே! இந்தக் குட்டியின் கதை ஒன்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்: தாய் இதை மிகவும் அன்பாக வளர்த்துக் காப்பாற்றிவந்தது. அப்படியிருக்க, ஒரு சமயத்தில் இது மிகவும் துடுக்காய் அடங்காமல் போனதைக் கண்டு தாய் கோபித்து இதை ஓங்கி ஓரறை யறைந்தது. அதைத் தாளமாட்டாமல் இந்தக் குட்டி கீச்சிட்டதைக் கேட்டுத் தாய்யானை மிகவும் விசனப்பட்டுப் பின்னு மதிகமான பிரீதியை இதன்மேல் வைத்து, 'உன்னுடைய நன்மைக்காகவேதான் நானிப்படி யுன்னை யடித்தேன்; இனிமேலாவது சொன்னபடி கேட்டுச் சரியாக நட' என்று குட்டிக்குப் புத்தி சொல்லிற்று" என்ருன்.

அப்புறம் அந்த ஆட்டக்காரன் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து 'என் செல்வச் சிறுவர்களே! நான் உள்ளே போய்வருகிறேன்; அதுவரையில் நீங்கள் இந்தக் குட்டியோடு விளையாடிக்கொண்டிருங்கள்' என்று சொல்லிவிட்டுப் போனான். அதைக்கேட்டுப் பிள்ளைகளெல்லாரும் மிகுந்த சந்தோஷம் அடைந்து, யானைக்குக் கொடுக்கத் தம் பைகளில் ஏதாவது தின்பண்டமிருக்கிறதாவென்று பைகளை அவிழ்த்துப் பார்த்தார்கள். சில பைகளில் தோசை அகப்பட்டது; சில பைகளில் அப்பமிருந்தது; சில பைகளில் முறுக்கு மசால்வடை முதலியவைகள் இருந்தன. அவைகளையெல்லா மெடுத்துப் பிள்ளைகள் ஒவ்வொருவராய் யானைக்குட்டிக்குக் கொடுத்தார்கள். அதற்கு மூசுண்டையென்று ஒரு குறைவுமில்லை, மனோகர உருண்டையென்று ஒரு மேன்மையுமில்லை; எல்லாவற்றையும் தன் துதிக்கையில் வாங்கி ஒரேதன்மையாய்த் தின்றுவிட்டுப் பிள்ளைகளுக்கு வந்தனமும் செய்து, இன்னும் யார் என்ன கொடுப்பார்களென்று தன் துதிக்கையை வீசி வீசி, பிள்ளைகளைத் துழாவிக்கொண்டிருந்தது. இதனால் அந்த யானைக்குட்டி அப்பிள்ளைகளுக்கு மிகவும் பழக்கமாகி, சிறிதும் அஞ்சாமல் அவர்கள் அதனோடு விளையாடத் தொடங்கினார்கள்.

இப்படியிருக்க, பத்து வயதுள்ள துஷ்டையான ஒரு சிறுபெண் அந்தக் குட்டியோடு குறும்புசெய்ய நினைத்து, 'நான் இப்பொழுது இதற்குத் தின்னக் கூடாத பொருளொன்று கொடுக்கிறேன்; அதைத் தெரிந்துகொண்டு இது தள்ளிவிடுகிறதா, அல்லது வாயில் போட்டுக்கொள்ளுகிறதா? பார்ப்போம்' என்று சொன்னாள்.

அதைக்கேட்டு யானைக்குட்டியினிடத்தில் அதிக ஆசையுள்ளவர்களான இரண்டு மூன்று பிள்ளைகள், 'பெண்ணே! அப்படிச் செய்யவேண்டாம்; யானையை இப்படி ஏமாற்றலாகாது; அது புத்தியீனமானகாரியம்' என்று அவளுக்குப் புத்திசொன்னார்கள். என்ன சொல்லியும் கேளாமல் அந்தப் பெண் யானைக்குட்டியை அலைக்கழிக்கப் பண்ணுவதில் அதிகமான ஆவலுள்ளவளாய் இருந்தாள். அதனாலவள் ஒரு கையில் பெரிதான ஓர் லட்டு உருண்டையையும், மற்றொரு கையில் அதேஅளவான ஓர் கூழாங்கல்லையும் எடுத்துக்கொண்டு யானைக்குட்டியண்டை போய் மிகுந்த சந்தோஷத்துடனே முதலில் லட்டு உருண்டையை அதற்குக் கொடுத்தாள். அதுவும் ஆவலோடு தன் சிறு துதிக்கையால் அதை வாங்கித் தன் வாயிலே போட்டுக்கொண்டது. பிறகு அந்தப் புத்தியில்லாத பெண் கையை நீட்டிக்கூழாங்கல்லை யானைத் துதிக்கையில் கொடுத்தாள். அப்பொழுது பிள்ளைகளெல்லாரும் என்னநடக்குமோ வென்று அச்சத்தோடும், ஆவலோடும் ஒன்றும் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். யானைக்குட்டி கூழ்ங்கல்லைக் கையில் வாங்கி வாயண்டை கொண்டுபோய், மறுபடியும் வெளியே கொண்டுவந்து கீழே போட்டுவிட்டது. அதைக்கண்ட பிள்ளைகளெல்லாரும் குல்லென்று கைகொட்டி நகைத்தார்கள். யானைக்குட்டிக்குக் கல்லைக் கொடுத்த துஷ்டப்பெண்ணும் மற்றப் பிள்ளைகளோடு கூடிப் பெருநகை நகைத்து, பிள்ளைகளின் பெருங்கூட்டத்தின் நடுவே ஓடிப்போய் ஒளித்துக்கொண்டாள். இவர்க ளிப்படிச் சிரித்ததும், அந்தப் பெண் அகடவிகடம் பண்ணினதும், யானைக்குட்டிக்கு எப்படியிருந்தவோ தெரியாது. ஆனாலும், இச்செய்கைகளால் யானைக்குட்டிக்கு மனத்தில் மிகுந்த சங்கடமுண்டாயிற்றென்பதுமாத்திரம் நிச்சயம். சங்கடமாத்திரமேயல்ல, அதிகமான கோபமும் உண்டாகிவிட்டது. உடனே அது எல்லாரையும் பயப்படுத்துவதுபோலத் தன் துதிக்கையை மேலே தூக்கிக்கொண்டு மிகுந்த மூர்க்கத்துடனே பிள்ளைகளின் பெருங்கூட்டத்தில் பிரவேசித்தது. அதைக்கண்டு பிள்ளைகளெல்லாரும் நடுநடுங்கி, கா, கூ வென்று கத்திக்கொண்டும், கீச்சிட்டுக்கொண்டும், தப்பித்துக்கொள்ள நாற்புறமும் ஓடத் தலைப்பட்டார்கள். தன்னையே யானைக்குட்டி யடிக்க வருகிறதென்று ஒவ்வொரு பிள்ளையும் பயந்து ஓடினான். ஆனாலும், அந்த யானைக்குட்டி ஒருவரையும் ஒன்றும் செய்யவில்லை; அந்தக்கூட்டம் முழுமையும் தேடிக்கொண்டே போயிற்று. கடைசியில் அந்தக் கூட்டத்து நடுவில் எங்கோயோ ஓரிடத்திலே கல்லைக் கொடுத்த கொடிய பெண் பதுங்கிக்கொண்டிருந்ததைக் கண்டுபிடித்து, தன் துதிக்கையால் ஓங்கி அவள் முதுகில் ஓரறை யறைந்தது. அது தாளமாட்டாமல் அந்தப் பெண் கீச்சிட்டுக்கொண்டுகீழே விழுந்தாள்.

இதற்குள் யானைக்காரன் பிள்ளைகள் போட்ட பெருங்கூச்சலைக் கேட்டு என்னவோவென்று

பயந்து வெளியே வந்து யானை பிள்ளைகள் கூட்டத்தில் பிரவேசித்ததைப் பார்த்து, கையில் கயிற்றை எடுத்துக்கொண்டு வெகு வேகமாக யானையண்டை ஓடிவந்தான். அவன் அங்கே வந்தது சேர்ந்தது நல்ல சமயம். அவன் அந்த நிமிஷம் அங்கு வந்து சேராதிருந்தால், அந்தப் பெண்ணுக்குப் பிராணன் போய்விட்டிருக்கும். கோபம்கொண்ட யானைக் குட்டி அவளை யடித்துக் கீழே தள்ளினவுடனே அப்படியே அவளை மிதித்துவிடும்படி அவள்மேலே வைக்க முன்னங்காலைத் தூக்கிக்கொண்டு நின்றது. அத்தருணத்திற்குச் சரியாய் அவன் வந்து சேர்ந்து அப்பெண்ணின் பிராணனைக் காப்பாற்றினான்.

அப்பொழுது அந்த யானைக்குட்டி தான் சிறிதும் பிசகு செய்ததாக நினைக்கவில்லை; பிள்ளைகள் தன்னை யெப்படி நடத்தினார்களோ, அப்படியே அது அவர்களை நடத்திற்று. அதைப் பார்த்து அந்தப் பிள்ளைகளெல்லாரும், 'இனி நாம் இப்படி ஒரு ஜீவனுக்கும் தீமை செய்யலாகாது; செய்தால், இப்பெண் பட்ட பாடே நாமும் படுவோம்' என்று ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு போய் விட்டார்கள்.

யானை தனக்கு நன்மை செய்தவர்களையாயினும் தீமை செய்தவர்களையாயினும், ஒருபொழுதும் மறக்காது; நன்மை செய்தவர்களுக்கு நன்மையும், தீமை செய்தவர்களுக்குத் தீமையும் செய்யும் சுபாவ முடையது.

பரிதாபமான கதை.

ஒரு கனவான் சென்னபட்டணத்தில் வசித்துக்கொண்டிருந்தவன் காரியவசமாய் மலையாளம்போக நேரிட்டது. அப்பொழுது தன்னுடைய அருமையான நாயைக் கூடக்கொண்டுபோகச் சாத்தியப்படாமல், தனது நண்பன் ஒருவனிடம் விட்டுப்போனான். அவன் போன சில நாளைக்கெல்லாம் அந்த நண்பன் தேகசௌக்கியத்திற்காகப் பெங்களூருக்குப் போக நேரிட்டது. அந்தச் சமயத்தி லவன் நாயை இன்னது செய்கிறதென்று தெரியாமல், அதையும் கூடவே கூட்டிக்கொண்டு போனான். நாயும் நண்பனும் சுகமாகவே பெங்களூர் போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடம் சேர்ந்த சில நாளைக்கெல்லாம் அந்த நாய் எங்கேயோ காணமல் போய்விட்டது. அவன் தன்னாலானவரையில் அவ்வூர் முழுமையும் அதைத் தேடிப் பார்த்தான்; அது அகப்படவேயில்லை. அதனால் அவன் மிகவும் விசனப்பட்டு, நாய் காணமல்போன சங்கதியைத் தன் தோழனுக்குக் கடிதமெழுதித் தெரிவித்துவிட்டான். இது இப்படியிருக்க,

மலையாளம் போன கனவான் சில மாதங்களுக்குப் பிறகு அங்கு ஒருநாள் ஒரு சபையிலே போய்ப் பேச நேர்ந்தது. அங்கே அவன் எழுந்து பேச ஆரம்பித்தபொழுது, தன்னுடைய அருமையான நாயின் நினைப்பு வந்து துக்கம் மேலிட்டுப் பேச நாவெழாமல் கண்ணும் கண்ணீருமாக நின்றான். அதைக் கண்டு அண்டையிலிருந்தவர்கள் இதென்னவென்று திடுக்கிட்டு, ஏன் விசனப்படுகிறீரென்று கேட்க, அவர்களுக்கும் சமாதானம் சொல்ல வாயெழாமல் 'என்னுடைய அருமையான நாய், என்னுடைய அருமையான நாய்' என்றுமாத்திரம் தட்டித்தடுமாறிக்கொண்டு சொன்னான். அவர்களெல்லாரும் சற்றுநேரம் சமாதானப்படுத்தித் தேற்றினபிறகு வெகு கஷ்டப்பட்டு அவன் தன் நாயின் கதையை அவர்களுக்கு முழுமையும் சொன்னான்.

இப்படியிருக்கையில், இது நடந்த சில நாளைக்குப் பிறகு உடம்பெல்லாம் புண்பட்டு, பசியாலும், வருத்தத்தாலும் உடல்மெலிந்து களைத்த ஒரு நாய் இந்தப் பிரபு வீட்டு வாயிலண்டை போய்க் குரைத்துக்கொண்டு உள்ளே நுழையப் பார்த்தது. அங்கிருந்த வேலைக்காரர்கள் அதை உள்ளே போகவொட்டாமல் வெளியே அடித்துத் துரத்தினார்கள். அது அப்படியே போய்விட்டதோ, இல்லை; மறுத்து மறுத்துப் பலதரம் உள்ளே நுழைந்தது. எத்தனைதரம் பிரயத்தனப்பட்டாலும், வேலைக்காரர்கள் உள்ளே போக வழிவிடவில்லை. மறுபடியும் கடைசியாக நாய் வந்து நுழைந்தபோது அங்கிருந்தவர்கள் அதைக் கொடுமையாக அடித்துத் துரத்தினார்கள். ஐயோ பாவம்! நாய் என்ன செய்யமாட்டும்! தனக்கு வேண்டிய சங்கதியைச் சொல்ல அதற்கு வாயில்லையே! அதனால் யஜமானனாவது சற்று வெளியேவரமாட்டானாவென்று வாயிலிலே அது காத்துக்கொண்டிருந்தது. இப்படியிருக்க, அந்த வீட்டு யஜமானன் தற்செயலாய் வெளியே வந்தான். அதைக் கண்டு அந்த நாய் சரேலென்று அவன்மேல் பாய்ந்து, தன்னை அவன் தெரிந்துகொள்ளும்படி பலவிதமான செய்கைகள் செய்தது. இதற்குள் அங்கிருந்த வேலைக்காரர்கள் அந்த நாய் நெடுநேரமாக வாயிலில் வந்து உபத்திரவம் செய்கிறதென்று எஜமானனோடு சொல்லி, திரும்பவும் அதை வெருட்டி ஓட்டப் பார்த்தார்கள். இத்தருணத்தில் அந்த எஜமானனுக்குச் சென்னபட்டணத்தில் தான் விட்டுவந்த அருமையான நாயின் ஞாபகம் வந்துவிட்டது. 'இப்படி இளைத்து மெலிந்து வருந்தி மாறுவேஷப்பட்டிருக்கிற இந்த நாய், காணமல்போன நமது நல்லநாயாயிருக்குமோ' என்றெண்ணி அவன் அதை உற்றுப்பார்த்து, என் கண்ணாவென்று கூப்பிட்டான். யஜமானன் குரலைக் கேட்டவுடனே அந்த நாய் கீச்சிட்டுக்கொண்டு கண் சுழன்று அவன் கால்களில் விழுந்தது. உடனே அவன் அதை வாரி யெடுத்து அணைத்து உள்ளே கொண்டுபோய்த் தன் மெத்தையின்மேல் படுக்கவிட்டான். ஐயோ! அவனுடைய துர்ப்பாக்கியம் அப்பொழுது நாய்க்குப் பிராணன் போய்விட்டது.

உண்மையாக நடந்த இக்கதையைக் கேட்டால் எப்படிப்பட்ட கல்நெஞ்சருக்கும் மனம் கரைந்து உருகாதோ! அந்த நாய் பல நூறுமைல் தூரத்துக் கப்பால் தன் எஜமானன் இருப்பதை எப்படியோ மோப்பத்தால் கண்டறிந்து அவ்வளவு தூரமும் தனியே ஊணுறக்கமின்றி வழி நடந்துபோனதையும், தன்னை எஜமானன் கண்டறியும்படி அவன் வீட்டுவாயிலிலே போய்ப் பலவிதமாகப் பாடுபட்டதையும் நாம் நினைத்தால், எவ்வளவு பரிதாபமாயிருக்கின்றது! எஜமானனிடத்தில் இப்படிப்பட்ட பிரீதியுள்ள பிராணியும் உலகத்தில் வேறொன்றுண்டோ? தன்னைக் காண்பதற்காகத் தன்னைத் தேடிக்கொண்டு இவ்வளவுதூரம் பாடுபட்டு வந்து தன்னைக் கண்டமாத்திரத்திலேயே தன் அருமையான தோழன் களிப்படைந்து தன் காலில் விழுந்து பிராணனைப் பறிகொடுத்ததைப் பார்த்தபோது அந்த எஜமானனுடைய மனம் எப்படிப் பரிதபித்ததோ, நாமறியோம்.

அருமையாக வளர்த்த வாயில்லா ஜீவன்களை எப்படிப்பட்ட காலத்திலும் நாம் விட்டுப் பிரியலாகாதென்பதும், நிற்க நிழலில்லாமல் நமது வீட்டு வாயிலிலே வந்து பசியோடு வருந்துகிற பிராணிகளை நாம் ஒருபொழுதும் இப்படி வெருட்டி ஓட்டலாகாதென்பதும், நெஞ்சை யுருக்குகிற இந்த நாயின் கதையினுல் நமக்கு நன்ருக விளங்குகின்றனவல்லவா!

சூரனுன ஒரு நாய்.

நாயினுடைய நல்லறிவைப்பற்றின அற்புதமான கதைகள் அநேகம் உண்டு. அவைகளில் அதிசயமான கதை யொன்று சொல்லுகிறேன், கேளுங்கள்: இருப்புப்பாதை வண்டி போகும் வழியில் வண்டிக்குக் குறிகாட்டுகிற காவற்காரன் ஒருவன் ஒரு வண்டித்தொடர் வரும்போது குறிகாட்டித் திரும்புகையில் கீழே விழுந்து காலை யொடித்துக்கொண்டான். அது இராக்காலம். அதன் பின்னே மற்றொரு வண்டித்தொடர் வெகுவேகமாக வந்துகொண்டிருந்தது. அங்கே பெருமழை பெய்து பாதை உடைந்துபோயிருந்தது. அபாயக் குறிகாட்டி அந்த வண்டித்தொடரை நிறுத்தாத பக்ஷத்தில், சில நாளைக்குமுன் சென்னை இருப்புப்பாதையில், மங்கபட்டணம், கோரேர் முதலான இடங்களில் கொடிய அபாயம் நேரிட்டது போல் அபாயம் நேரிட்டு அநேகம் பிரயாணிகள் பிராணனை யிழக்கவேண்டியதாகும். அந்தக் காவற்காரனுக்கோ, எழுந்து ஒரு அடி வைக்கவும் சக்தியில்லை. ஐயோ! அப்பொழுது அவன் என்ன செய்வான்? ஆனல், அந்த வண்டியில் வரும் பிரயாணிகளுடைய நல்லகாலம் அவனிடத்தில் அருமையான நாய் ஒன்றிருந்தது. அந்த நாய் கணப்பொழுதும் அவனைவிட்டுப் பிரிவதேயில்லை. அந்தக் காவற்காரனுக்குச் சமயத்துக் கேற்றபடி நல்ல புத்தி தோன்றி, அபாயக்குறி காட்டுகிற சிவப்பு விளக்கைத் தன் நாயினிடம் கொடுத்து, வண்டி வரும் பாதை நடுவே போய் நிற்கும்படி அவன் அதை அனுப்பினுன்.

இதற்குள் அந்த வண்டித்தொடர் வெகு வேகமாகச் சமீபத்தில் வந்துவிட்டது. நாயோ, அதற்குச் சிறிதும் அஞ்சாமல் பாதை நடுவேபோய் நிலையாக நின்று வண்டிக்கு விளக்குக்குறி காட்டிற்று. சிவப்பு விளக்கு எதிரே யாடுவதைப் பார்த்து வண்டித்தொடர் ஓட்டுகிறவன் இதென்னவென்று திடுக்கிட்டுத் திடீரென்று அவ்விடத்திலேயே வண்டித்தொடரை நிறுத்திவிட்டான். நிறுத்தினபிறகு வண்டியை நிறுத்தக் குறிகாட்டினது யாரென்று அவன் இறங்கிப்போய்ப் பார்க்கையில், ஒரு எளிய நாய் சிவப்பு லாந்தரை வாயில் கவ்வி ஆட்டிக் கொண்டிருந்ததென்று அறிந்தான்.

அந்த வண்டித்தொடரில் அன்றையதினம் அந்த இருப்புப்பாதை வண்டிக்கு எஜமானனே ஏறிவந்தான். அவனும் வண்டியிலிருந்த மற்றப் பிரயாணிகளும் உடனே இறங்கி அவ்விடத்திலிருந்த பெரிய அபாயத்தைப் பார்த்து இந்த நாயினுலல்லவா இன்றையதினம் நம்முடைய பிராணன் காப்பாற்றப்பட்டதென்று மிகவும் சந்தோஷமடைந்து, அந்த நாயினிடத்தில் அதிகமான நன்றிபாராட்டினுர்கள். அன்றியும், அந்த வண்டியி லேறிவந்த பிரபுக்கள் பலர் எவ்வளவு தொகை வேண்டுமானுலும் கொடுத்து அந்த நாயைத் தாம் தாம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அந்த ஒரு நாய் யாருக்கென்ருகும்? கடைசியி லது அந்த இருப்புப்பாதைத் தலைவனுக்குக் கொடுக்கப்பட்டு அவனது குடும்பத்தில் சேர்ந்துவிட்டது.

அவனிடத்திலேயே அந்தநாய் பல வருஷகாலம் அன்பும் ஆசையுமாய் அவனுக்கு நல்ல தோழனுக வாழ்ந்துகொண்டிருந்து, கடைசியில் இறந்துபோயிற்று. அதைக்கண்டு எஜமானன் மிகவும் விசனப்பட்டு, தன் குடும்பத்து முன்னேர்களை அடக்கம் செய்திருக்கும் இடத்திற்கு மத்தியில் அந்த நாயின் உடலை அடக்கம் செய்து அதனிடத்தில் தனக்குள்ள நன்றியை வெளியிட்டான். இது இப்படியிருக்க, ஜீவகாருண்யமில்லாத மதிகேடர் சிலர், 'நம்முடைய முன்னேர்களை அடக்கஞ்செய்த இடத்திலா ஒரு அற்பமான நாயை அடக்கம் செய்வது? இனி நம் உடலையும் இவ்விடத்திலேதானே அடக்கம் செய்யவேண்டும்? நாயும், நாமும் ஒன்றுதானே?' என்று அதன்மேல் ஆக்ஷேபிக்கத் தொடங்கினுர்கள். அந்த நாயின் உடலை அவ்விடத்தை விட்டுப் பேர்த்துவிடவேண்டுமென்றுகூட வேண்டிய பிரயத்தனங்கள் நடந்தன. இந்த நாய் தன்னுடைய சொற்பமான வாழ்நாளில் செய்திருக்கும்

அருமையான காரியங்களை நூற்றிலொரு மனிதர்களாவது செய்திருப்பார்களோ? இல்லை. அப்படியிருக்க, இந்தப் பெருமை நம்முடைய நல்ல நாய்க்கு ஏலாதோ? அவர்கள் என்ன எண்ணங்கொண்டு இதை ஆக்ஷேபிக்கத் தொடங்கினார்களோ நாமறியோம்.

ஒரு கிழ எருதும் சில சிறுவர்களும்.

கிழ எருது ஒன்று நெடுநாள் உழைத்து உடல் மெலிந்ததனுல் எழுந்திருக்கச் சக்தியில்லாமல் ஒரு வயலிலே படுத்துக்கொண்டிருந்தது. அங்கே விளையாடப்போன சில சிறு பிள்ளைகள் அந்த எருதைப் பலவிதமாய் அடித்துத் துன்பப்படுத்தி, அந்த அடி பொறுக்கமாட்டாமலும், எழுந்து ஓடிப்போக சக்தியில்லாமலும் எருதுபடுகிற சங்கடத்தைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். 'எருதின் நோவு காக்கைக்குத் தெரியுமோ' என்கிறபடி இந்தப் பிள்ளைகளுக்கு அதன் வருத்தம் இப்படிப்பட்டதென்பது சிறிதும் தெரியாது. மனிதருக்காகவே தன் வாழ்நாளெல்லாம் உழைத்து அந்த எருது இப்படி வலிகுறைந்துபோயிற்று என்பது அந்தப் பிள்ளைகளுக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் அதை அப்படி அடித்துத் துன்பப்படுத்துவார்களோ? படுத்தமாட்டார்கள்.

அத்தருணத்தில் அவ்விடம் வந்த ஒரு பெரியவர் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, 'நீங்களிங்கே என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டார். 'நாங்கள் இந்த எருதை யடித்து விளையாடிக்கொண்டிருக்கிறோம்' என்று பிள்ளைகள் மறுமொழி சொன்னார்கள். அதைக்கேட்டுப் பெரியவர், 'அப்படியா! நல்லது; நானும் இப்பொழுது சற்றுநேரம் உங்களை யடித்து விளையாடுகிறேன்' என்று அவர்கள் கையிலிருந்த கழியை வாங்கி ஒவ்வொரு பையனையும் மெல்ல ஒவ்வொரு அடி அடித்து, 'இப்பொழுது உங்களுக்கு எப்படியிருக்கிறது' என்று கேட்டார். 'ஐயோ! உடம்பு நோகிறதே, நோகிறதே' என்று அடித்த விடத்தைக் கையால் துடைத்துக்கொண்டே ஒவ்வொரு பிள்ளையும் சொன்னான். அதைக்கேட்டுப் பெரியவர் 'உங்களைப்போல் இதுவும் ஒரு ஜீவன் தானே; இதற்கும் இப்படித்தானே நோகும், எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்குமே; ஆகையால், எளிய ஜீவனென்று நாம் எந்தப் பிராணியையும் வருத்தபபடுத்தலாகாது. மேலும் இந்த எருது இல்லாவிட்டால் நமக்கு எந்தக்காரியமாகும்? எருது உழுதுதானே நமக்கு நெல் வருகிறது. எருதுதானே வண்டியிழுக்கிறது. இந்த எருது தன் வாழ்நாளெல்லாம் நமக்கு ஏருழுதும், வண்டியிழுத்தும்தான் இப்பொழுது இப்படிக் கிழமாய்ப் போயிருக்கிறது. இதை நினைக்கும்பொழுது, இந்தத் தள்ளாத எருதை நாம் நமது கண்போல வைத்துக் காப்பாற்றவேண்டுமல்லவா?' என்று சொன்னார். அதைக்கேட்டு அச்சிறுவர்கள், 'ஐயோ! இதுவரையில் இச்செய்தி எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே! இதுவரையில் எங்களுக்கு இப்படிப் புத்திசொன்னவர் ஒருவருமில்லை' என்று சொல்லி அந்தப் பெரியவரிடத்தில் நன்றியுள்ளவர்களாய் அவருக்கு வந்தனமும் செலுத்திப் போய்விட்டார்கள்.

ஒரு நல்ல திருஷ்டாந்தம்.

சிலநாளைக்கு முன்னே இரண்டு சிறுவர்கள் வண்டியி லேறிக்கொண்டு பட்டணம் பார்த்துவரப் போனார்கள். வண்டி கடைத்தெருவு வழியாகப் போகும்பொழுது வண்டியி லிருந்தவர்களில் ஒரு சிறுவன் கண்ணாடிக் கடையண்டை திடீரென்று வண்டியை நிறுத்தச்சொல்லிக் கீழே குதித்தான். அங்கே அவன் செய்த காரியமென்ன வென்கிறீர்கள்? கண்ணாடிக்காரர் உடைத்துப் போட்டுவிட்ட அநேகம் கண்ணாடித் துண்டுகள் பாதையில் இறைந்துகிடந்தன. வண்டியைவிட்டு இறங்கினவுடனே அச்சிறுவன் ஒன்றுகூட விடாமல் அந்தத்துண்டுகளையெல்லாம் பொறுக்கிச் சேர்த்தான். அதைப்பார்த்து வண்டிக்காரன் சிரித்து, 'ஐயா! உங்களுக்கென்ன பைத்தியமோ? இந்தக் கண்ணாடித் துண்டுகளால் என்ன உபயோகம்? வீணாய் வண்டியைக் காக்க வைத்துக்கொண்டு வீணுக்கு இவைகளை ஏன் பொறுக்குகிறீர்கள்?' என்று கேட்டான். அதற்கு அந்தச் சிறுவன், 'அப்பா! கோபங்கொள்ளாதே. இது எனக்காக அல்ல; உனக்காகத்தான். வண்டி இவ்வழியாகப் போகும்பொழுது இந்தத் துண்டுகள் உன் குதிரையின் காலில் பொத்திக்கொண்டு காயப்படுத்திவிட்டால் குதிரைக்கு மிகுந்த வருத்தமுண்டாகுமே; அதனால் உன் ஜீவனத்துக்கும் கேடுதானே. உன் குதிரைமாத்திரமே யல்ல, இவ்வழியாகப் போகும் வேறு வண்டிக் குதிரைகளுக்கும் மாடுகளுக்கும், மற்றும் பல மனிதர்களுக்கும் இந்தக் கண்ணாடித் துண்டுகள் காலில் பொத்திக்கொள்ளுமல்லவா? அதற்காகவே இவைகளை நான் பொறுக்கி யெடுத்தேன்' என்றான்.

கண்ணாடிக் கடைகளண்டையும், இரும்புக்கடைகளண்டையும் தெருவிலே கண்ணாடித்துண்டுகளும் ஆணிகளும் இப்படி அநேகமாய் இறைந்து கிடப்பதுண்டல்லவா? அவைகளை அநேகர் பிரதிதினம் பார்த்துக்கொண்டேதான் போகிறார்கள். அவை மனிதர் காலிலும், மாடு, குதிரைமுதலான வாயில்லா ஜீவன்களுடைய காலிலும் பொத்திக்கொண்டு காயம்பட்டதையும் அநேகர் கண்டும் கேட்டுமிருக்கிறார்கள். அவைகளைப் பொறுக்கி யெடுப்பது ஒருவருடைய வேலையுமல்ல. அநேகர் இவைகளைக் கவனிப்பதேயில்லை. சிலர் கவனித்தாலும், நமக்

கென்னவென்று உபேக்ஷையாய்ப் போய்விடுகிருர்கள். இப்படியிருக்க, நமது சிறுவனுக்கு ஜீவகாருணியத்தினுல் அவைகளைப் பொறுக்கி அப்புறம் போடவேண்டுமென்கிற நல்லெண்ணம் உண்டானது மிகவும் கொண்டாடத்தக்கதல்லவா? இனியாவது இதைப் படிப்பவர்கள் தாங்கள் தெருவில் போகும்பொழுது தங்கள் கண்ணில் படுகிற கல், முள், ஆணி, கண்ணுடி முதலானவைகளை எடுத்து அப்புறம் போட்டு, தமக்குள்ள ஜீவகாருணியத்தை வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிருேம்.

சிறுவர்களுக்கு வேண்டிய சில விதிகள்.

பிள்ளைகளே! நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாய் உங்கள் தாய் தந்தையர்களுக்கு வேண்டிய உதவி செய்யுங்கள். பெற்ருேர்களுக்கு உபசாரம் செய்யும்படியான பாக்கியம் பெற்றதற்காகக் கடவுளை வணங்குங்கள்.

பெரியோர்களைக் கண்டால், கையெடுத்துக் கும்பிடுங்கள். வழியே போகும்பொழுதும், வண்டி முதலான இடங்களில் உட்காரும்பொழுதும், பக்கத்திலுள்ளோரை நெருக்கித் தள்ளாதேயுங்கள்.

பத்துப்பேர் நடுவில் பொடிபோட்டும், சுருட்டுப் பிடித்தும், காறியுமிழ்ந்தும், அண்டையிலுள்ளவர்களுக்கு அருவருப்புண்டாக்க வேண்டாம். உங்கள் நகத்தைக் கடிக்கவேண்டாம்; பல்லைக் குத்த வேண்டாம்; இவையெல்லாம் கெட்ட வழக்கங்களாம்.

ஒருவர்மேலும் கோள் சொல்லாதேயுங்கள்; ஏதாவது சொல்லவேண்டியிருந்தால், நேராகவே சொல்லவேண்டும்; புறங்கூறலாகாது. வழியிலாயினும், வண்டியிலாயினும், யாராவது ஏதேனும் ஒரு பொருளைக் கீழே போட்டுவிட்டால், அதை எடுக்க உங்களாலான உதவி செய்யுங்கள்.

மொண்டி, முடம், குருடு முதலானவர்களைக் கண்டால், அவர்களை விழித்துப் பாராதேயுங்கள். கிழவர்களையும், குரூபிகளையும் கண்டு ஒருபொழுதும் நகைக்காதேயுங்கள். அது கீழ்மக்கள் செய்கிற காரியமாம்.

பிரதிதினம் காலையில் எழுந்திருக்கும்பொழுது 'இன்று நாம் யாருக்கு என்ன உதவிசெய்யலாம்' என்று ஆலோசித்துக்கொண்டே எழுந்திருங்கள்.

எவரைக்கண்டாலும் மரியாதை செய்யுங்கள்.

எவராயினும் எங்கேயாயினும் நல்ல வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருந்தால், அங்கே சற்று நின்று அதைக் காதுகொடுத்துக் கேட்டு நீங்களும் அப்படியே பேசப் பழகுங்கள். கெட்ட பேச்சுக்களை ஒருபொழுதும் காதுகொடுத்துக் கேளாதேயுங்கள்.

பத்துப்பேர் பார்த்துக்கொண்டிருக்கையில் நீங்கள் தனியே சிரிக்கவுமாகாது, கொசகொசவென்று பேசவுமாகாது. அப்படிச் செய்தால், அவர்களுக்கு மிகவும் மனவருத்தமுண்டாகும்.

ஜீவகாருணியம்.

ஆடு மாடு குதிரை நாய் முதலான ஜீவன்களை ஒருபொழுதும் இம்சைப் படுத்தாதேயுங்கள். அப்படிச் செய்தால், அவைகளுக்கு எரிச்சலும் அசௌக்கியமும் உண்டாகும். குதிரை முதலான ஜீவன்கள் நமக்கு நல்ல துணையாயும் உதவியாயு மிருக்கின்றன. அவைகளோடு ஒருபொழுதும் கோபமாய்க் கடிந்து உரத்துப் பேசாதேயுங்கள். நாம் எவ்வளவு நன்மையாய்ப் பேசுகிருேமோ, அவ்வளவு நன்ருக அடங்கி அவை நமக்கு ஊழியம் செய்யும். நம்முடைய முரட்டுத்தனத்தினுலேயே அவைகளுக்கு மூர்க்க குணம் உண்டாகிவிடுகிறது.

வாயில்லா ஜீவன்களை நீங்கள் வருத்த நினைக்கும்பொழுது, 'உங்களைப்பார்க்கிலும் வலிவுள்ளவனை ஒருவன் உங்களை வருத்தினுல் உங்களுக்கு எப்படியிருக்கும்' என்று யோசித்துப் பாருங்கள்.

வாயில்லா ஜீவன்கள் நாக்கு வறண்டபோது வந்து தண்ணீர் குடிக்க உங்கள் வீட்டு வாயிலில் எப்பொழுதும் தொட்டியிலே தண்ணீர் கொட்டி வையுங்கள்.

எளிய ஜீவன்களை யாராவது இம்சிக்கக் கண்டால், அது பாவமென்று அவர்களுக்கு நல்ல தனமாகப் புத்திசொல்லுங்கள். அதை அவர்கள் கேட்காவிட்டால், பக்கத்திலுள்ள போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவியுங்கள்.

எந்த ஜீவனையும் அடியாதேயுங்கள். பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடித் துப்பாக்கியால் சுடாதேயுங்கள்; கண்ணிவைத்துப் பிடியாதேயுங்கள். சில வலைகள் மிருகங்களைக் காலிலே கடித்துக்கொண்டு கொடிய துன்பத்தை விளைவிக்கின்றன. கத்திரி வைத்து எலிகளைப் பிடிப்பதும் பொல்லாதகாரியம். இவைகளெல்லாம் மிகவும் கொடுமையான பாவச் செய்கைகள். இப்படிப்பட்ட பொல்லாங்குகளைச் செய்பவர்கள் கடவுளுடைய கருணைக்கு விலக்காகிப் பிற்காலத்தில் கொடிய துன்பங்களை யனுபவிப்பார்கள். 'பொல்லாங் கென்பவை யெல்லாம் தவிர்' என்பது ஔவைச் சொல்.

ஆகையால், நீங்கள் இந்த விதிகளை நன்ருகப் படித்து ஜீவகாருணிய முள்ளவர்களாகிக் கொடுமை செய்வதைக் கைவிட்டு, பரோபகாரம் செய்வதையே பெரிதாகப் பாருங்கள். நல்லவர்களாக வாழ விரும்புகிறவர்களுக்கு இவை மிகவும் உத்தமமான விதிகளாம். பெற்ருேர்களும், உபாத்தியாயர்களும் இவற்றைத் தங்கள் பிள்ளைகளுடைய மனத்தில் நன்ருய் ஊன்றச் செய்வார்களென்று எதிர்பார்க்கிருேம்.

வாயில்லா ஜந்துக்களுக்குக் கணக்குத் தெரிதல்.

வாயில்லாத எளிய ஜந்துக்களுக்குக் கணக்கெண்ணத் தெரியுமோ என்பதைப்பற்றிச் சில நாளைக்குமுன் ஒரு புலவர் கேள்விகேட்டு, அதற்குத் தாமே தகுந்த சமாதானம் சொல்லியிருக்கிறார். அதாவது, உலகத்தில் சாதாரணமாய் அநேகம் மிருகங்களுக்கு மூன்று நான்குக்குமேல் கணக்கு எண்ணத் தெரியாது. அந்தத் தொகைக்குமேல் மனிதர்களாயினும் மற்றெந்தப் பொருள்களாயினும் சேர்ந்திருந்தால், அவர்களைப் பகுத்தறியும் திறமையில்லாமல் அந்தப் பிராணிகள் அல்லாடுவதை அநேகர் அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள். பொதுவாக மிருகங்களின் தன்மை இப்படியிருந்தாலும், அநேகம் வாயில்லா ஜீவன்கள் இந்தத் தொகைக்கு மேலும் வெகுதூரம் புத்தி கூர்மையாய்க் கணக்கு எண்ணிக்கொள்ளுகிற திறமையுடையனவா யிருக்கின்றன. இதற்கு ஆச்சரியமான அநேகம் திருஷ்டாந்தங்கள் உண்டு; சொல்லுகிறோம் கேளுங்கள்:—

1. நிலக்கரிக் கனிகளில் வேலை செய்கிற குதிரைகள் பலவுண்டு. அவை பிரதிதினம் முப்பது நடை சாமான் ஏற்றிக்கொண்டு போய் வரவேண்டுமென்று ஏற்பாடு. எல்லாக் குதிரைகளும் ஒன்றாய்க் கூடவே போகவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை; வேகமாக நடக்கிற குதிரைகள் சுறுசுறுப்பாக உழைத்துத் தமது வேலையைச் சீக்கிரமே முடித்துவிடும். ஒவ்வொரு குதிரையும் தன் முப்பதாவது நடை முடிந்தவுடனே மற்றக் குதிரைகளின் வரவை யெதிர்பாராமல் தனித்தனியே குதிரைச்சாலைக்குப் போய்விடுகின்றன என்று அதைப் பார்த்தவர் ஒருவர் ஆச்சர்யப்பட்டு எழுதினார். முப்பதுவரையில் கணக்கு எண்ணத் தெரியாவிட்டால், தாம் செய்யவேண்டிய முப்பது நடை வேலையும் முடிந்துவிட்டதென்பது இந்தக் குதிரைகளுக்கு எப்படித் தெரியும்.

2. இப்படியே இத்தேசத்து நாட்டுப்புறங்களில் அநேகம் வண்டி யெருதுகள் ஒருநாளைக்கு இத்தனை நடை கல்வண்டி முதலானவைகளை இழுத்துக்கொண்டு போகிறதென்கிற ஏற்பாடு உண்டு. அப்படியே அத்தனை நடையும் போய்வந்தவுடனே அந்த எருதுகள் அன்றையதினத்து வேலை யொழிந்ததென்று இளைப்பாறப் படுத்துக்கொள்ளுகின்றன.

3. இத்தேசத்திலே சில விடங்களில் பெரிய பாரமான சுமைகளை ஓரிடத்திற் கோரிடம் கொண்டுபோக யானைகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அங்கே ஒரு நாளைக்கு இத்தனை நடை யென்கிற கணக்குண்டு. அந்த வழக்கம் தெரிந்து அங்கே வேலைசெய்கிற யானைகள் நடை கணக்காகிவிட்டால், அப்புறம் ஒரு நடைகூடப் போக உடன்படாமல் மறுத்துவிடுகின்றன.

4. இப்படிச் சரியாகக் கணக்கு எண்ணும் திறமை நாய்களுக்கும் விசேஷமாக உண்டு. ஒரு தருணத்தில் ஒரு நாய்க்குத் தின்பதற்கு அநேகம் எலும்புகள் போட்டார்கள். அது தன் பசி தணியும்வரையில் தனக்கு வேண்டியதைத் தின்றது. தின்றவை போக 26 எலும்புகள் மிகுந்திருந்தன. அந்த நாய் அவைகளைப் பல விடங்களில் பத்திரமாகப் புதைத்து வைத்தது. பிறகு மறுநாள் பசியெடுத்தபொழுது அது அவற்றில் 25 எலும்புகளை எடுத்துத் தின்று படுத்துக்கொண்டது. படுத்துக்கொண்டவுடனே அதிகமான மனக்கவலையோடு எழுந்து சற்றுநேரம் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்று ஆலோசித்து, அப்புறம் அந்த 26-வது எலும்பையும் கண்டெடுத்துத் தின்று சுகமாய்ப் படுத்துத் தூங்கிற்று என்று அந்த நாய்க்கு உடையவர் தாமே ஆச்சரியப்பட்டுச் சொல்லியிருக்கிறார்.

5. கணக்கு எண்ணுகிற சாமர்த்தியம் இப்படி நாற்கால் ஜந்துகளுக்கு மாத்திரமேயல்ல; பக்ஷிகளுக்கும் அதிகமாக உண்டு. தாம் இட்ட முட்டைகள் இத்தனையென்றும், அவைகளில் இத்தனை முட்டைகள் குஞ்சு பொரிந்தனவென்றும் பல பறவைகள் சரியாக கணக்கு வைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று காணாமல் போனாலும், அவை மிகவும் சங்கடப்படுவதுண்டு.

சில பறவைகளுக்குப் பிரதிதினம் இத்தனை அப்பத்துண்டு உணவு போடுகிறதென்கிற ஏற்பாடு சில விடங்களி லுண்டு. அந்த வழக்கம் தெரிந்து அந்தப் பக்ஷிகள் அவற்றில் ஒன்று குறைந்தாலும் அப்புறம் நகருவதில்லை; கணக்குப்படி எல்லாம் போட்டுவிட்டால் உடனே பறந்து ஓடிப்போவதை அநேகர் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள்.

6. சில பிராணிகள் காலஅளவையும் கிழமையும் சரியாகக் கணக்கிடும் திறமை உள்ளனவாயிருக்கின்றன வென்று அநேகர் சொல்லி ஆச்சரியப்படுகிறார்கள். இங்கே அநேகம் பிராமணர்களுடைய வீடுகளில் பிரதிதினம் போஜனகாலத்தில் காக்கைகளுக்குப் பலிபோடுவது வழக்கம். அவ்வீடுகளில் காக்கைகள் நாள்தோறும் அந்த வேளை தப்பாமல் வந்து காத்திருந்து அவர்கள் கொடுக்கும் உணவைத் தின்றுவிட்டுப் போவது பலருக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்ததுதான்.

7. ஞாயிற்றுக்கிழமைதோறும் மாதாகோவிலுக்குப் போய் ஒரு பாதிரியார் பிரசங்கம் செய்து வருவது வழக்கம். அவர் போகும்பொழுது தான் நாய் ஒன்றைக்கூடவே கூட்டிக்கொண்டுபோவார். அவர் அங்கே இவ்வளவுநேரம் பிரசங்கம் செய்வதென்கிற ஏற்பாடு உண்டு. அதற்குமேல் கொஞ்சம் அதிகமாக நாழிகையாகிவிட்டால், அந்த நாய் எழுந்து குரைக்கத் தொடங்கி நாழிகை யாகிவிட்டதென்பதை அவருக்கு அறிவிக்கும். இப்படி யடிக்கடி

குளைத்து அந்த நாய் பிரசங்கத்திற்குத் தடைசெய்வது கண்டு அவர் ஒரு ஞாயிற்றுக்கிழமை தன்னோடு கூட வரவொட்டாமல் நாயைத் தன் வீட்டிலேயே ஒரு அறையில் விட்டுப் பூட்டிட்டுப் போய்விட்டார். அப்புறம் அந்த நாய் செய்த காரிய மென்னவென்கிறீர்களோ? மறுவாரம் சனிக்கிழமை இராத்திரி அது காணுமல் போய்விட்டது. எங்கே தேடியும் அகப்படவில்லை; மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிரசங்கம் செய்கிற வேளைக்குச் சரியாக அது அந்த ஆலயத்தின் வாயிலில் வந்து காத்திருந்தது என்று அதன் யஜமானனே வியந்து சொல்லுகிறூர்.

8. முக்கியமாக கணக்கு எண்ணும் திறமை குதிரைகளுக்கு மிகவும் அதிகமென்று அநேகர் கொண்டாடுகிறூர்கள். ஒரு கனவான் கிழமாய்ப்போன தன் குதிரை ஒன்றைவேலைசெய்ய விடாமல் வீட்டிலேயே சுகமாக வைத்துக் காப்பாற்றிவந்தார். அதற்குப் பிரதிதினம் காலையில் ஆறுமணி வேளைக்குக் கொள்ளு வைப்பது வழக்கம். அந்தக் குதிரை கட்டியிருந்த இடத்திற்குப் பக்கத்திலே பெரிய கடிகாரமொன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிகாரத்தில் ஆறு அடித்தவுடனே அந்தக் குதிரை நாள்தப்பாமல் கொள்ளுக்குக் கனைத்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து அதன் யஜமானன் ஒருநாள் அந்தக் கடிகாரத்து முள்ளை முன்னே தள்ளி 5 மணிக்கே ஆறு அடிக்கும்படி வைத்தான்; அன்றையதினம் அந்தக் கிழக்குதிரை கடிகாரம் ஆறு அடித்த 5 மணி நேரத்திற்கே கொள்ளுக்குக் கனைத்தது. அதைக் கண்டு அவன் மறுநாள் கடிகாரத்தை ஒருமணி நேரம் நிறுத்தி வைத்து 7 மணிக்கு 6 அடிக்கும்படி செய்தான். அன்றைய தினம் அந்தக் குதிரை ஏழுமணி நேரமளவும் பட்டினியாயிருந்து, அப்பொழுது 6 அடித்த பின்பே கொள்ளுக்குக் கனைத்ததென்பதை அநேகர் கேட்டு ஆச்சரியப்படுகிறூர்கள்.

கணக்கு எண்ணத் தெரியாத குரங்குகள்.

இப்படிக் கணக்கு எண்ணத் தெரியாத பேதை பிராணி குரங்குகளாம். குரங்குகளின் இந்த மூடத்தனத்தையே அநேகர் தமக்குப் பெரிய உதவியாகக் கொண்டு குரங்குகளைப் பிடித்துக் கொண்டுபோய் விடுகிறூர்கள். எப்படியென்றூல், குரங்குகளைப் பிடிக்கப் போகிறவர்கள் ஐந்தாறுபேர் கூட்டமாகக் குரங்குகளிருக்குமிடத்திற்கு அவைகளுடைய கண்ணெதிரே போய், பிறகு ஓரிடத்தில் ஒளித்துக் கொள்வார்கள். சற்றுநேரம் பொறுத்து அக்குரங்குகள் பார்த்துக்கொண்டிருக்க, நான்குபேர் வெளிப்பட்டுப் போய்விடுவார்கள். கணக்கெண்ணத் தெரியாத குரங்குகள் அதைப் பார்த்து வந்த மனிதர்கள் எல்லாருமே போய்விட்டதாக நினைத்துச் சிறிதும் அச்சமின்றி வெளியே வந்து திரியும். அப்பொழுது ஒளித்திருப்பவர்கள் அவைகளுக்குத் தெரியாமலே வஞ்சித்து ஒவ்வொன்றூய்ப் பிடித்து விடுவார்கள்.

நானுவிஷயங்கள்.

1. **தன் குட்டிகளை இழந்து துக்கமடைந்த நாய்.**—சுகமாக வாழ்ந்துகொண்டிருந்த ஒரு நல்ல நாய் ஒரு தருணத்தில் ஒன்பது குட்டி போட்டு, அவைகளோடு பேராநந்தமா யிருந்தது. அப்படியிருக்க, குட்டிகள் கண்திறந்து கொஞ்சம் பெரியவையாகித் தாமே இரைதேடிக்கொள்ளவும், துள்ளி விளையாடவும் திறமை யுண்டானவுடனே, நாயின் எஜமானன் குட்டிகளையெல்லாம் அயலாருக்குக் கொடுத்துவிட்டான். குட்டிகளை இழந்த நாய் சில நாள்வரையில் அந்த விசனத்தினுல் இரையே எடாமலிருந்து அதேகாரணமாய்ப் பிராணனை விட்டது. இது ஒன்றுமாத்திரமேயல்ல, இப்படியே புத்திரசோகத்தினுல் பிராணனைவிட்ட வாயில்லா ஜீவன்கள் அநேகம் உண்டு. மனிதரைப்போலவே மிருகங்களுக்கும் துக்கமும், மனக்கிலேசமும் மிகவும் அதிகமென்பது இதனுல் விளங்குகிறதல்லவா?

2. **தண்ணீர்த் தொட்டிக்கு மாதிரிசெய்து கொடுப்பவர்களுக்கு ஏற்படுத்திய வெகுமதி.**—அமெரிக்காவிலே பல பெரிய பட்டணங்களில் வீதிகளிலே தண்ணீர்த் தொட்டியில்லாத குறை மிகவும் அதிகமென்று அநேகர் அடிக்கடி முறையிட்டுக் கொண்டிருக்கிறூர்கள். இப்பொழுதுதான் இத்தேசத்து நகரங்களைப்போலவே சிற்சில விடங்களில் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. மனிதர்களும், மிருகங்களும் சுலபமாய்த் தண்ணீர் குடிப்பதற்கு அனுகூலமாக வெண்கலத்தினுல் நல்ல மாதிரியான தொட்டி யொன்று செய்து கொடுப்பவர்களுக்கு, 500 ஷிலிங்கு வெகுமதி யளிப்பதாக அத்தேசத்து ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் மூலமாக ஓர் பிரபு பிரசுரம் செய்திருக்கிறூர். செய்யப்பட்டுவரும் மாதிரித் தொட்டிகளில் எது மிகவும் நன்றூயிருக்கிறதோ அதைப்பார்த்து அதேமாதிரியாகப் பல தொட்டிகள் செய்வித்து வீதிகளில் வேண்டுமிடங்களிலே வைக்கப்படுமாம்.

தொட்டி செய்யவேண்டியவிதம்இப்படியென்று முதலில் சிறிய மாதிரி செய்து காட்டுகிற சிற்பிக்கு 400 ஷிலிங்கு வெகுமதி யளிக்கப்படுமாம். அது நல்ல மாதிரி யென்று சங்கத்தாரால் அங்கீகரிக்கப்படும்பக்ஷத்தில் அதேமாதிரி பெரிய தொட்டிகள் செய்ய அந்தச் சிற்பியே பெரியதாக உருவம் வனைந்து கொடுத்தால், அவனுக்குப் பின்னும் ஒரு 100 ஷிலிங்கு சம்மானம் கொடுக்கப்படுமென்றும் பிரசித்தம் செய்திருக்கிறூர்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1906.